Dear Teachers

Thank you for your interest in our **One Story** school activities!

Read, Reap, Write Package

We have specially chosen three extracts from the book, *One Story: Razi*, for students and teachers to read and discuss in class. We hope the curated questions would stimulate their thinking processes and initiate meaningful discussions. We have prepared these packages in English, Chinese, Malay and Tamil to encourage students to read and communicate in English and their Mother Tongue languages.

As a token of appreciation, we will gift you copies of the book for each completed class report submission, while stocks last. These copies are to be distributed to your students. Please click on (https://go.gov.sg/os21-sr) to submit a soft copy of the report which can be found on the website together with the activity packages. Please include 1-2 photos of the activity being carried out. If there are multiple reports from your school, please compile all the soft copies of the reports and submit through the link above. Your submission must not exceed 10mb. Reports are to be submitted **by 15 July 2022**.

Please refer to Appendix A for more details on the National Library Board's One Story project and the book, *One Story: Razi*.

For further queries, please contact Nur Fitri or Agnes Ang at nur_fitri_muhammad_syafran@nlb.gov.sg and agnes_ang@nlb.gov.sg respectively.

Thank you.

Best Regards,
One Story Project Team

All Rights Reserved. National Library Board, 2022. © National Library Board, Singapore (NLB).

## Appendix A


### Synopsis of *Razi*

Every day is a painful struggle for Nani, the mother of Razi, a boy with special needs. As Nani finds herself increasingly frustrated by society's lack of understanding and empathy for Razi's condition, she is by turns swayed and pressured by her sister's incessant cajoling to seek help from a traditional Malay healer. Nani keeps the treatment a secret from her husband – out of fear and also perhaps guilt. Razi is slowly tamed into obedience. The healer sees it as progress, but is submission into silent acquiescence a cure at all?

Razi will make you ponder over the great lengths people would go to and the sacrifices they make for their loved ones. Readers will be tempted to weigh in on the dilemmas that Nani has to grapple with and tread along the emotional rollercoaster of her struggle and guilt. Will we condemn her choices? Or empathise with her challenges?

### The One Story Project

One Story is a project by the National Library Board to make Singapore short stories – originally written in Tamil, Malay, Chinese, or English – available in the other languages. The project aims to bring these stories to more readers beyond the language communities that they were originally written for. *Razi* is a short story by Dr Sa'eda Buang that was originally written in Malay. The book features the story in all four languages and is available for borrowing on https://www.go.gov.sg/libby-razi.




| | |
|---|---|
| Title: | One Story: Razi |
| Author: | Sa'eda Buang |
| Call no.: | Adult SING English SAE (hardcopy)<br>https://www.go.gov.sg/libby-razi (eBook) |
| Publisher: | National Library Board, 2021 |

All Rights Reserved. National Library Board, 2022. © National Library Board, Singapore (NLB).

Read, Reap, Write Package
Facilitator's Guide

| | | |
|---|---|---|
| **Name of Package** | **:** | One Story: Razi |
| **Objective(s)** | **:** | To initiate meaningful discussions and develop empathy in students |
| **Target Audience** | **:** | Upper secondary |
| **Recommended Duration** | **:** | 1 hour per excerpt |
| **Room Setup** | **:** | Students in groups of 3-4 at different tables |
| **Book Title** | **:** | One Story: Razi |
| **Book Author** | **:** | Sa'eda Buang |
| **Call Number** | **:** | Adult SING English SAE (hardcopy)<br>https://www.go.gov.sg/libby-razi (eBook) |

Notes to Facilitator:

- Remember to take 1-2 photos during the activity.
- Please submit a report of the session through the Form SG link indicated on the cover letter. If there are multiple reports, facilitator is to compile all and submit as 1 submission.
- Activity sheets can be printed and distributed to students.

All Rights Reserved. National Library Board, 2022. © National Library Board, Singapore (NLB).

வாசித்தல், பயன்பெறுதல், எழுதுதல் தொகுப்பு
சா'யிடா புவாங்கின் ராஸி என்ற கதையிலிருந்து எடுக்கப்பட்டது

பத்தி 1

நான் செய்வதறியாது அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் சுழலும் பம்பரம் போல வேக வேகமாகச் சுழன்று கொண்டிருந்தான். "அன்ன இளவரசி" திரைப்படத்தில் வரும் "பாலே " நடனமணியைப் போல ஒல்லியான கால்களில் சுழன்று கொண்டே இருந்தான். கைகளை நீட்டினான். பிறகு மடக்கினான். கண்களை மூடிக்கொண்டு ஆகாயத்தைப் பார்த்தபடி கைகளால் தன்னை இறுக்கமாகக் கட்டிக் கொண்டான். அந்த ஒரு தருணத்தில், அவன் விடாமல் சுழன்று கொண்டிருந்த சத்தம் மட்டுமே என் காதுகளில் இடிபோல ஒலித்தது.

நான் சமையலறையில் இருந்தபடியே செய்வதறியாது அக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். சுழன்று சுழன்று களைத்துப்போன பிறகு, கைக்குக் கிடைத்ததை எல்லாம் ஒழுங்குபடுத்தத் தொடங்கிவிடுவான். அதுதான் ராஸியின் வழக்கம். இம்முறை கணினி வட்டுகள் அவன் கைக்குக் கிடைத்தன. வட்டுகளை ஒன்றன்மீது ஒன்றாகக் கவனமாக அடுக்கி வைத்தான். சாய்ந்த பீசா கோபுரம் போல, புவியீர்ப்புச் சக்திக்கு மசியாத உயரத்திற்கு வட்டுகளை அடுக்கி விட்டான். அதைச் செய்யும்போது அவனது வாய் அசைபோட்டுக்கொண்டே இருந்தது. அந்த ஓசைகள் எனக்கு நன்கு பழகிப்போனவை. ஆனால், அவன் அடுக்கிய எதுவுமே சாய்ந்து விழுந்ததில்லை. பொருட்களை ஒழுங்குபடுத்துவதில் ராஸி திறமைசாலி.

கடைக்குட்டி லெமானோ நானோ ராஸி அடுக்கியதை சில சமயங்களில் தெரியாமல் தட்டி விட்டிருக்கிறோம். அப்படி நடந்த போதெல்லாம், ராஸி கோபாவேசத்துடன் ஆர்ப்பாட்டம் செய்வான். தன்னைத்தானே அங்குமிங்கும் இடித்துக் கொள்வான் அல்லது கைகளில் காயம்படும்வரை சுவரை அடிப்பான். இதனால், ராஸி அடுக்கும் பொருட்களுக்கு அருகில் லெமானும் நானும் செல்வதில்லை. ராஸி பயன்படுத்தும் பொருட்களில் ஏதாவது என்று எனக்குத் தேவைப்பட்டாலும்கூட.

ஒருமுறை, ரயில்வண்டி போல கிடை நிலையில் ராஸி அடுக்கி வைத்திருந்த புத்தகங்களிலிருந்து ஒன்றை மெதுவாக எடுக்க முயற்சி செய்தேன். ஆனால், கத்தி முனை போலக் கூர்மையான ராஸியின் கண்களிலிருந்து எதுவுமே தப்பாது.

All Rights Reserved. National Library Board, 2022. © National Library Board, Singapore (NLB).

| |
|---|
| அன்றிரவு முழுவதும் வாசல் கம்பிக்க தவின்மீது தலையை விடாமல் இடித்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தான். |

<u>கலந்துரையாடுவோம்</u>

1. நீங்கள் நீண்ட நாட்களாக உருவாக்கிக் கொண்டிருந்த ஒன்று அழிக்கப்பட்டால் அல்லது நாசப்படுத்தப்பட்டால் நீங்கள் எப்படி உணர்வீர்கள்? இந்த உணர்வை நீங்கள் வழக்கமாக எவ்வாறு வெளிப்படுத்துவீர்கள்?
2. விரக்தியிலும் கோபத்திலும் இருக்கும் யாரையாவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது உங்களை எப்படி உணரச் செய்தது? அது உங்களை அந்த நபருக்கு உதவத் தூண்டியதா அல்லது விட்டு விலகிச் செல்ல வழி வகுத்ததா?
3. பொருள்களை ஒழுங்குபடுத்துவதில் ராஸி திறமைசாலி. நீங்கள் சிறப்பாகச் செய்யும் ஒரு வேலையைப் பகிருங்கள்.

<u>உங்கள் சொல்வளத்தைத் தெரிந்து</u> கொள்ளுங்கள்
(வரையறைகள் ஆக்ஸ்போர்டு (oxford) மேம்பட்ட கற்பவர் அகராதியில் இருந்து எடுக்கப்பட்டன).

1. நெஞ்சம் இளகாத - (ஒரு விரும்பத்தகாத சூழ்நிலையில்) நிறுத்த மறுப்பது அல்லது தீவிரத்தில் குறையாமல் இருப்பது.
2. நிச்சயமில்லாத - ஒரு பொருளையோ ஒரு நபரையோ விழ வைக்கும் அளவில்.
3. நேர்மையற்ற - மற்றவர்கள் கவனிக்காத அளவில் விரைவாக அல்லது கள்ளத்தனமான வழியில் ஒரு செயலைச் செய்வது.

<u>எழுதுவோம்</u>
நீங்கள் கற்றுக்கொண்ட சொற்களை அல்லது சொற்றொடர்களைப் பயன்படுத்தி உங்கள் சொந்த வாக்கியத்தை உருவாக்குங்கள்.

1. நெஞ்சம் இளகாத:
2. நிச்சயமில்லாத:
3. நேர்மையற்ற:

All Rights Reserved. National Library Board, 2022. © National Library Board, Singapore (NLB).

வாசித்தல், பயன்பெறுதல், எழுதுதல் தொகுப்பு
சா'யிடா புவாங்கின் ராஸி என்ற கதையிலிருந்து எடுக்கப்பட்டது

பத்தி 2

சுட்டெரிக்கும் வெயிலில் டாக்சிக்காகக் காத்திருந்தேன். ராஸியின் கையை இறுக்கமாகப் பிடித்திருந்தேன். நான் டாக்சியை நிறுத்தகை காட்டுவதைப் பார்த்த ராஸியும் கார், பேருந்து, லாரி, மோட்டார் சைக்கிள் என எல்லா வாகனங்களையும் பார்த்துக் கைகளை ஆட்டத் தொடங்கினான். ராஸி நாங்கள் வசிக்கும் அதே கட்டடத்திலுள்ள அண்டைவீட்டார்கள் எங்களைப் பார்த்து கையசைத்தார்கள்.

“டெசி, டெசி, டெசி” டாக்சியின் உள்ளே போகும் வரை ராஸி சொல்லிக் கொண்டே இருந்தான்.

டாக்சி ஓட்டுநர் எங்களைத் திரும்பத் திரும்பப் திரும்பிப் பார்த்தார். அவர் முகம் கறுத்துப்போனது. அவனுக்கு என்ன வேண்டுமாம்? இடது பக்கமாக உட்காரச் சொல்லுங்கள் .”ஏன்,என்ன பிரச்சனை?” இதே வெறித்த பார்வையை இதற்குமுன் ஆயிரக்கணக்கான முறை சந்தித்திருக்கிறோம் . எனக்கு அலுத்துவிட்டது. பணிவன்பான ஓட்டுநர்கள் ஒருமுறை லேசாகத் திரும்பிப் பார்த்துவிட்டு,நாங்கள் அங்கே இல்லாததுபோல பாசாங்கு செய்வார்கள். ஆனால் இந்த ஓட்டுநருக்குத் துளிகூட இரக்கமில்லாததுபோலத் தோன்றியது.

“அவன் அங்குமிங்கும் அசைந்தாடி குதிக்கிறான். என்னால் ஓட்ட முடியவில்லை!” என் ஆன்மா எதிர்த்தது. டாக்சியிலிருந்து இறங்கி நடந்து செல்லவேண்டும் போல இருந்தது. ஆனால், அது சாத்தியமில்லை என்பது எனக்குத் தெரியும். முடிவில், ஓட்டுநர் விரும்பியபடி செய்தேன். எப்படியாவது நாங்கள் செல்லவேண்டிய இடத்தை அடைந்தால் போதும்.

“அவனை ஒழுங்காகப் பிடித்துக் கொள்ளுங்கள்.”

நான் கோபத்தில் குரலை உயர்த்தினேன்.

All Rights Reserved. National Library Board, 2022. © National Library Board, Singapore (NLB).

"உங்களுக்கு என்னதான் வேண்டும்? அவன் ஒரு பிரச்சனையும் செய்யவில்லையே."

"மன்னித்துவிடுங்கள் ! கோபப்படாதீர்கள். முன்பு ஒருமுறை இவனைப் போன்ற சிறுவனை டாக்சியில் ஏற்றிச் சென்றேன். அவன் டாக்சியில் குதித்துக் கொண்டே நிறைய சத்தம் போட்டான். கண்ணிமைக்கும் நேரத்தில், என் தலையில் இடித்துவிட்டான். நான் விபத்தில் சிக்கவிருந்தேன்."

<u>கலந்துரையாடுவோம்</u>

1. வாகனம் ஓட்டும்போது ராஸி அதிகமாக அசைந்து கொண்டிருந்ததால் டாக்சி ஓட்டுநர் கவலைப்பட்டார். டாக்சி ஓட்டுநரின் கவலைகள் நியாயமானவை என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

2. ராஸியுடைய தாயாரின் மனத்தைப் புண்படுத்தாமல் டாக்சி ஓட்டுநர் தனது கவலைகளை எவ்வாறு வெளிப்படுத்தியிருக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

3. உங்கள் செயல்கள் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் இருந்திருக்கிறீர்களா? அப்போது உங்களுக்கு எப்படி இருந்தது? நீங்கள் ஒரு விளக்கத்தைக் கொடுக்க முயற்சி செய்தீர்களா அல்லது மற்றவர்களிடமிருந்து புரிதலைப் பெற முயற்சி செய்தீர்களா?

<u>உங்கள் சொல்வளத்தைத் தெரிந்து</u> கொள்ளுங்கள்
(வரையறைகள் ஆக்ஸ்போர்டு (oxford) மேம்பட்ட கற்பவர் அகராதியில் இருந்து எடுக்கப்பட்டன).

1. சுட்டெரிக்கும் - மிகவும் சூடான
2. வெறித்தனமாக - விரைவாகவும் நிறைய நடவடிக்கைகளுடனும், ஆனால், அவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்யப்படாத ஒரு முறையில்
3. முகம் கறுத்துப்போனது - ஒரு மகிழ்ச்சியற்ற அல்லது ஏமாற்றத்தின் வெளிப்பாடு

All Rights Reserved. National Library Board, 2022. © National Library Board, Singapore (NLB).

<u>எழுதுவோம்</u>
நீங்கள் கற்றுக்கொண்ட சொற்களை அல்லது சொற்றொடர்களைப் பயன்படுத்தி உங்கள் சொந்த வாக்கியத்தை உருவாக்குங்கள்.

1. சுட்டெரிக்கும்:
2. வெறித்தனமாக:
3. முகம் கறுத்துப்போனது:

All Rights Reserved. National Library Board, 2022. © National Library Board, Singapore (NLB).

வாசித்தல், பயன்பெறுதல், எழுதுதல் தொகுப்பு
சா'யிடா புவாங்கின் ராஸி என்ற கதையிலிருந்து எடுக்கப்பட்டது

பத்தி 3

தொலைபேசி மணி ஒலித்தது. இறைவா, அது மியா அக்காவாக இருக்கக்கூடாது. இருக்கவே கூடாது...

"நானி, நான் ரோஸ் அக்கா பேசுகிறேன். எனக்கு ஒரு உதவி வேண்டும். நான் சொல்லப் போவதைக் கேட்டு கோபப்படாதே. இந்த வாரப் பிறந்தநாள் ஒன்றுகூடலைப் பற்றி தான் பேசவேண்டும்."

என் அண்டைவீட்டார்தான் அழைத்திருந்தார்.

"உங்களுக்கு என்ன வேண்டும் ரோஸ் அக்கா? நீங்கள் சொன்னதுபோல சமோசா தயார் செய்து விடுகிறேன். நாளைக்குப் பொரித்து எடுத்து வருகிறேன்."

அவர் மௌனமாக இருந்தார்.

"இப்படிச் சொல்வது எனக்கே சிரமமாக இருக்கிறது. உன் உணர்வுகளைக் காயப்படுத்த நான் நினைக்கவில்லை. ஆனால், முடியுமானால், இந்த வார இறுதியில் ஒன்றுகூடலுக்கு வராமல் இருக்க முடியுமா? என் நண்பர்கள் பிள்ளைகளை அழைத்து வருவார்கள். அவர்களைப் பார்த்து ராஸி மிரண்டு விடுவானோ எனக் கவலையாக இருக்கிறது. ராஸியை சமாதானப்படுத்த நீ அவன் பின்னால் ஓடுவதைப் பார்க்கும்போது எனக்குக் கவலையாக இருக்கும். முன்பு செய்ததைப் போல, ராஸி மறுபடியும் கால்சட்டையைக் கழற்றி விட்டால் என்ன செய்வது? உண்மையிலேயே, நான் உன்னை வருத்தப்பட வைக்க விரும்பவில்லை. சத்தியமாகச் சொல்கிறேன். நீ விருப்பப்பட்டால், லெமானை அழைத்து வா. ராஸி அப்பாவுடன் வீட்டில் இருக்கட்டும்..."

All Rights Reserved. National Library Board, 2022. © National Library Board, Singapore (NLB).

<u>கலந்துரையாடுவோம்</u>

1. நீங்கள் நானியாக இருந்தால் உங்களுக்கு எப்படி இருந்திருக்கும்?

2. நானியும் ராஸியும் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ளக்கூடாது என்று ரோஸ் அக்கா கேட்டுக்கொண்டது சரி என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

3. உங்களுடைய நண்பர் அவனது விருந்துக்கு உங்களை அழைத்துவிட்டு பின்னர் வரவேண்டாம் என்று கூறினால் உங்களுக்கு எப்படி இருக்கும்?

<u>உங்கள் சொல்வளத்தைத் தெரிந்து</u> கொள்ளுங்கள்
(வரையறைகள் ஆக்ஸ்போர்டு (oxford) மேம்பட்ட கற்பவர் அகராதியில் இருந்து எடுக்கப்பட்டன).

1. சமோசா - ஒரு வகையான சூடான, காரமான தெற்காசிய உணவு. இந்த முக்கோண வடிவ மெல்லிய பேஸ்ட்ரி (pastry) உணவினுள் இறைச்சி அல்லது காய்கறிகள் நிரப்பப்பட்டிருக்கும். அது கடினமாக உலரும் வரை வறுக்கப்படும்.

   இதற்கு முன்னர் நீங்கள் சமோசா சாப்பிட்டிருக்கிறீர்களா? நீங்கள் இதற்கு முன்னால் சமோசா சாப்பிட்டு இருந்தால், அதன் சுவையை விவரிக்கவும். சமோசா போன்ற அமைப்பும் வடிவமும் கொண்ட வேறு 3 உணவுகளின் பெயர்களைக் குறிப்பிடவும். சமோசா செய்யத் தேவையான பொருட்கள் அல்லது அது எவ்வாறு சமைக்கப்படுகிறது போன்றவற்றையும் நீங்கள் கருத்தில் கொள்ளலாம்.

All Rights Reserved. National Library Board, 2022. © National Library Board, Singapore (NLB).